
முரசொலி
பாசறை

# கலைஞரும் நானும்

51

**“கலைஞர் என் வாழ்க்கையின் பாதையை மாற்றி அமைத்தவர். ஒரு சின்னவட்டத்தில் செயல்பட்டுக் கொண்டிருந்த என்னை, அரசியல் என்கிற பெரிய களத்துக்குக் கொண்டு வந்தவர். அவர் பெயரால் விருது பெற்று, அவர் கையால் ‘இயல் இசை விருது’ வாங்கினேன். ஆனால், எல்லாவற்றையும் விட மிகப்பெரிய கவுரவம் கிடைத்தது...” என தனது நினைவுகளைப் பகிர்கிறார் கவிஞர், எழுத்தாளர் மனுஷ்யபுத்திரன்.**

■ கவிஞர் **மனுஷ்யபுத்திரன்**



## “கவுரவத்துக்குக் குறைவில்லாமல் பார்த்துக் கொள்வோம்!”

“கலைஞருடனான எனது அனுபவங்களில் பெரும்பகுதி, அவரது அரசியல் சிந்தனைகள் சார்ந்ததாக உள்ளன. அவர் என்னுடைய பெயரைக் குறிப்பிட்டு, எழுதிய முதல் தருணத்தை என்னால் மறக்க முடியாது.

2001 ஆம் ஆண்டில், ஜெயலலிதா அம்மையார் ஆட்சியின்போது, அவரது ஆணவமான போக்கினைச் சித்தரிக்கும் விதமாக ‘அரசி’ என்கிற தலைப்பில் கவிதை எழுதி இருந்தேன்.

எங்கு பார்த்தாலும் கண்காணிப்பு, எதிர்க்கட்சிகள் மீது அடக்குமுறை, வேட்டையாடும் முனைப்பு, அராஜகமாக இருந்தது. அந்த மாதிரியான சூழலில் வெளியான அந்தக் கவிதை பரவலாகப் பேசப்பட்டது. அந்தக் கவிதை வெளியான ஒரு வாரத்தில், ஜெயலலிதா ஆட்சியின் அராஜகத்தின் உச்சக்கட்டமாக கலைஞர் கைது செய்யப்பட்டார். சம்பவம் நிகழ்ந்து முடிந்த இரண்டு வாரங்களில், என் கவிதை வெளியான பத்திரிகைக்கு ஒரு வாசகர் கடிதம் வந்தது. அதை எழுதியது கலைஞர்.

‘மனுஷ்யபுத்திரனின் ‘அரசி’ கவிதைப் படித்தேன். அது படி‘தேன்’ என அவருக்கே உரிய பாணியில் கடிதம் எழுதி இருந்தார். அந்தக் கடிதத்தை அந்தத் தருணம் என் நினைவுகளை விட்டு அகலாது. ஏனென்றால், அப்போதெல்லாம் நான் பிரபலமான ஆள் கிடையாது. இலக்கியப் பத்திரிகைகள் தாண்டி என் எழுத்துகள் வந்ததில்லை.

முக்கியமாக, கலைஞர் குறித்த வியப்பூட்டும் செய்திகளில் அவரது வாசிப்பினைச் சொல்வார்கள். ஆனால், தமிழ்நாட்டில் இருக்கும் வேறு எந்த அரசியல்வாதியாவது சிற்றிதழ் வாசிப்புப் பழக்கம் கொண்டவராக இருப்பாரா என யோசிக்கையில், கலைஞரின் வாசிப்பு எப்பேர்ப்பட்டது என்கிற வியப்பு மேலிடும். அப்போது நான், அரசியல் களத்திலோ, ஊடகக் களத்திலோ இல்லை. ஓர் எழுத்தாளராக மட்டுமே அடையாளப்பட்டிருந்த என்னை, அவர் அறிந்து வைத்திருக்கிறார் என்பது எனக்கு நெகிழ்ச்சியாக இருந்தது.

### எதிர்க்குரலுக்கு ஆதரவு

‘நக்கீரன்’ இதழில் ‘எதிர்க்குரல்’ என தொடர் கட்டுரைகள் எழுதி வந்தேன். அந்தக் கட்டுரைகளை கலைஞர் விரும்பிப் படிக்கிறார் என நண்பர்கள் பலரும் என்னிடம் கூறி இருக்கின்றனர். அந்தக் கட்டுரைகளில் இருந்து எடுத்து ‘முரசொலி’யில் மேற்கோள் காட்டுவார் கலைஞர்.

யாருமே எதிர்பார்க்கவில்லை. ஏனெனில், அது அவரைக் குறித்து நேரடியாக எழுதப்பட்டது அல்ல. எந்த வெகுஜன இதழிலும் வரவில்லை. குறிப்பாக, பெரும் அரசியல் இயக்கத்தின் தலைவர், ஒரு நெருக்கடியைச் சந்தித்திருந்த நேரத்தில் கவிதையை வாசித்துவிட்டு, கடிதம் எழுதுவதெல்லாம் நினைத்துப் பார்க்கவே முடியாதது. ஆனால், அந்தக் கவிதையைப் புரிந்துகொண்டு அவர் ஆற்றிய எதிர்வினை வியப்பானது. சமூகத்தின் எல்லா நிலைகளையும், எல்லா வெளிகளையும் கவனிப்பவராக அவர் இருந்தார் என்பதை, அதன் மூலம் நான் உணர்ந்துகொள்ளும் வாய்ப்பு அமைந்தது.

அதன்பின்னர், 2006-ஆம் ஆண்டில், சென்னை புத்தகக் கண்காட்சியின்போது, ‘பேட்டரி’ காரில் அரங்கங்களைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு வந்தார். ‘உயிர்மை’ அரங்கின் முன் அவரது கார் வந்து நின்றது. நான் அரங்கில் அவருக்கு முன் இருந்தேன். அப்போது கலைஞருடன் வந்திருந்த கவிஞர் வைரமுத்து, என்னை அறிமுகம் செய்தார். உடனே கலைஞர் அவர்கள் வைரமுத்து அவர்களிடம், ‘இவரை எனக்குத் தெரியாதா?’ என்றார்.



சவுதி அரேபியாவில் அளிக்கப்பட்ட ஒரு மரணதண்டனை குறித்து, நான் எழுதியதை, ‘முரசொலி’யில் பதிப்பித்தார். அதன் பின்னர் அந்தக் கட்டுரையின் வீச்சு வேறாக இருந்தது. அதற்கு அரசியல் தன்மை ஏறியது. அந்தக் கட்டுரைக்காக மத அடிப்படைவாதிகள் எனக்குக் கொலை மிரட்டல் எல்லாம் செய்தார்கள். கலைஞரின் ஒவ்வொரு சொல்லையும் தமிழ்நாடு எப்படி கவனிக்கிறது என்பதற்கு அந்தச் சம்பவம் உதாரணம்.

### ‘நெஞ்சுக்கு நீதி’ பேச்சு

அந்த நாட்களில் ஒரு நாள், நமது இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொலைபேசி செய்து, “கலைஞர் அவர்களின் ‘நெஞ்சுக்கு நீதி’ 5-ஆம் பாகம் வெளியீட்டு விழா நடக்கிறது. அந்த நிகழ்ச்சியில் நீங்கள் பேச வேண்டும் என விரும்புகிறோம்’ எனக் கூறினார். எல்லோரும் சோர்வுற்றிருந்த நேரத்தில், கலைஞர் மட்டும் இயங்குகிறார். ஓர் எழுத்தாளராக என்னை அழைக்கிறார் என்கிறபோது அந்த உணர்வு வேறுவிதமாக இருந்தது.

அண்ணா அறிவாலயத்தில் வெளியீட்டுவிழா நிகழ்ச்சி. கலைஞர் முன்னால் முதல்முறையாகப் பேசப் போகிறேன் என்பதால், நிறைய குறிப்புகள் எடுத்தேன். ஆனால், மேடைக்குச் சென்றதும் குறிப்புகளை எல்லாம் வைத்துவிட்டு, என் மனதுக்குத் தோன்றியதைப் பேசினேன். அந்த உரை என் ஆழ்மனத்தில் இருந்து வெளியானதாக இருந்தது.

அன்றைக்கு முதல்நாள்தான் பத்தாம் வகுப்புக்கான தேர்வு முடிவுகள் வெளியாகி இருந்தன. அதுவரை இல்லாத வகையில் மாணவர்களின் தேர்ச்சி விகிதம் இருந்தது. அதற்கு காரணமாக கலைஞர் கொண்டு வந்த ‘சமச்சீர்க் கல்வித் திட்டம்’ இருந்தது என்பதைக் குறிப்பிட்டு நான் பேசினேன். ஏனென்றால், சமச்சீர்க் கல்வியின் முதல் தேர்வு முடிவு அது. அரங்கம் மொத்தமும் ஆர்ப்பரித்து மகிழ்ந்தது. கலைஞர் முகத்தில் ஒரு புன்முறுவலைப் பார்த்தேன்.

எனது உரையில் கடைசியாக, “கலைஞர் வாழ்க்கையில், ஒரு துரதிர்ஷ்டம் என்னவென்றால், தன் வாழ்நாளில் அவரது தகுதிக்குக் குறைவான ஆட்களுடன் அரசியல் செய்ய வேண்டி இருந்தது” எனக் கூறியதும் கலைஞர் வாய்விட்டுச் சிரித்தார். அந்தக் காட்சியை இன்றைக்கும் என்னால் மறக்க முடியாது.

**அப்போது வரை நான் கட்சி உறுப்பினர் ஆகவில்லை. கட்சி மேடைகளில் பேசியவனில்லை. ஆனால் கலைஞரின் அந்த கணிப்பு என்னை கட்சிமேடைகளில் ஏற்றிவிட்டது.**

அடுத்த நாள் ‘முரசொலி’யில் அந்த நிகழ்ச்சி குறித்து அவர் எழுதுகையில், ‘நண்பர் மனுஷ்ய புத்திரன் கையில் எந்தக் குறிப்பும் இல்லாமல் பேசுகிற திறனை நான் வியந்து பார்த்துக் கொண்டிருந்தேன்’ எனக் குறிப்பிட்டிருந்தார். நான் என்ன பேசினேன் என்பதைவிட எப்படிப் பேசினேன் என அவர் கவனித்தது முக்கியமானது.

எத்தனை பேச்சாளர்களை அவர் உருவாக்கி இருப்பார், அவரைப் பார்த்து எத்தனையோ பேச்சாளர்கள் உருவாகி இருப்பார்கள். மேடையில், ஒருவர் எப்படிப் பேசத் தொடங்குகிறார் என்பதை வைத்தே, அவரது ஆற்றலை கணிக்கக் கூடிய அவர், நான் எப்படிப் பேசினேன் எனக் குறிப்பிட்டது உள்ளபடியே எனக்கு உற்சாகத்தைக் கொடுத்திருந்தது. அப்போது வரை நான் கட்சி உறுப்பினர் ஆகவில்லை. கட்சி மேடைகளில் பேசியவனில்லை. ஆனால் கலைஞரின் அந்த கணிப்பு என்னை கட்சிமேடைகளில் ஏற்றிவிட்டது.

### இறுதி ஊர்வலக் கவிதை

அதன்பின்னர், கழகத்தில் இணைவதற்கான சூழல் ஏற்பட்டது. எனது விருப்பத்தையும் தெரிவித்தேன். நமது முதலமைச்சர் அவர்கள் அப்போது கலைஞரிடம் அழைத்துச் சென்றார். எனது கழக உறுப்பினர் அட்டையில் கலைஞர் கையெழுத்திட்டு அளித்த தருணம் எனக்குச் சிலிர்ப்பாக இருந்தது.

உறுப்பினர் அட்டையைக் கொடுத்துவிட்டு நிமிர்ந்து பார்த்தவர், “ஓர் எழுத்தாளர் கழகத்துக்கு வந்திருக்கீங்க, உங்க கவுரவத்துக்கு ஒரு குறையும் வராமல் நாங்க பார்த்துக்குவோம்” என்றார். அந்த வார்த்தைகள் எவ்வளவு உன்னதமானது, சத்தியமானது என்பதை இப்போது வரை நான் அனுபவித்து வருகிறேன். இன்னும் சொல்லப் போனால், எனக்கு புதிய புதிய கவுரவங்களையும் அளித்துள்ளது.

அவரது இறுதி ஊர்வலத்தில் நடந்து செல்ல வேண்டும் என ஆசைப்பட்டேன். ஆனால், அதற்குச் சாத்தியமாகவில்லை. அன்றிரவு ஒரு கவிதை எழுதி பதிவு செய்திருந்தேன். அடுத்த நாள், அனைத்து ஊடகங்களும் கலைஞரின் இறுதி ஊர்வலக் காட்சிகளை எனது கவிதையுடன் ஒளிபரப்பின. எனது எழுத்துகளே அவரிடம் என்னைச் சேர்த்தன. எழுத்துக்களே அவர் பின்னால் நடக்கவும் வைத்தன...!”

...பகிர்வார்கள்

## சாவர்க்கர் வாரிசுகளின் வாக்குமூலம்!



கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி அவர்கள் சனாதனம் குறித்துப் பேசியபோது, ‘சனாதன தர்மத்தில் ஏற்றத் தாழ்வு என்பதே இல்லை’ என்று பா.ஜ.க.வினர் கூச்சலிட்டனர். ஆனால், ஏற்றத் தாழ்வுகளால் நிரம்பியதே ‘சனாதனம்’ என்பதை ஒப்புக்கொண்டிருக்கிறார் அசாம் பா.ஜ.க. முதல்வர் ஹிமந்தா பிஸ்வா சர்மா.

“பிராமணர், சத்ரியர், வைசியர் ஆகிய 3 வர்ணத்தாருக்கும் பணிவிடை செய்வதுதான் சூத்திரர்களின் வேலை” என ‘பகவத் கீதை’ சொல்வதாக தனது X தளப் பக்கத்தில் அவர் பதிவிட்டிருந்தார். அவரது கட்சியினர் அதைக் கண்டிக்கவில்லை. எனினும், எதிர்க்கட்சிகளின் கடும் கண்டனங்களைத் தொடர்ந்து, அவசர அவசரமாக அந்தப் பதிவை நீக்கிவிட்டு, ‘தனது ஊழியர், மொழிபெயர்ப்பில் தவறு செய்துவிட்டார்’ எனப் பகிரங்க மன்னிப்புக் கேட்டிருக்கிறார் ஹிமந்தா. சாவர்க்கர் வாரிசுதானே.. அப்படித்தான் இருப்பார்கள்..!

## :ப்ளாஷ்பேக்



### மாலையும் நிதியும்!



சுவாமிநாதன்

1967 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தலைமையில் கழகம் முதன் முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தது. அவரது அமைச்சரவையில் முத்தமிழறிஞர் கலைஞர் பொதுப்பணித்துறை அமைச்சராகப் பொறுப்பு வகித்தார். அவர், நாகப்பட்டினம் மாவட்டத்துக்கு வருகை தந்த போது சட்டமன்ற உறுப்பினர் ராஜமாணிக்கம் அவர்களோடு அவரி திடல் நேரு அரங்கில், மாலை அணிவித்து கட்சி நிதி வழங்கினேன்.

**-என்.சுவாமிநாதன், திருத்துறைப்பூண்டி, திருவாரூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### கழகத்தின் தொழிற்சங்கங்கள்

**1953 ஆம் ஆண்டு, மே 31 ஆம் தேதி, அரக்கோணம் நகரில் தி.மு.கழகப் பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில்தான் தொழிற்சங்கங்களில் தி.மு.கழகத் தோழர்கள் ஈடுபட்டு நடத்துவது எனத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. தீர்மானத்தை நடைமுறைக்குக் கொண்டு வரும் விதமாக தி.மு.கழகக் கிளைகள் ஆங்காங்கே தொழிற்சங்கங்களை நிறுவினர். கோவையில் திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர்கள் சங்கம், தூத்துக்குடியில் உப்பளத் தொழிலாளர்கள் சங்கம், அருப்புக்கோட்டையில் நெசவாளர்கள் சங்கம், திருச்சியில் அச்சுத் தொழிலாளர்கள் சங்கம், வால்பாறையில் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் சங்கம் என அடுத்த 2 ஆண்டுகளில் கழகத்தின் தொழிற்சங்கங்கள் பல உருவாகின.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 345




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131